அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 02/2021(VIII)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3381

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2023.05.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட நிறுவனங்களின் பிரதானிகள்

## அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2021.12.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2021(VI) இன் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன். அத்தோடு அதன் மூலம் 2021.10.01 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2021(V) இல், கோவிட் - 19 தொற்று பரவுவதனை தடுக்கும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டல்களை உள்ளடக்கிய ஏற்பாடு 07 ஆம் பந்தியில் அவ்வாறே இருக்க, 02, 03, 04, 05, 06, 08 மற்றும் 14 ஆம் பந்திகளின் ஏற்பாடுகள் 2022.01.03 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் இடைநிறுத்தி வைத்து, அரச உத்தியோகத்தர்களை 2022.01.03 ஆந் திகதி முதல் வழமை போல் சேவைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

02. அதன்படி, மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 2021.10.01 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 02/2021(V) இன் 07 ஆம் பந்தியின் ஏற்பாடுகளை 2023.05.15 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் இடைநிறுத்தப்படும் என்பதோடு அந்த திகதி முதல் உள்வருகை மற்றும் வெளிச்செல்கையை உறுதிப்படுத்துவதற்காக விரலடையாளப் பதிவு யந்திரங்களை உபயோகித்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள, 2009.04.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 09/2009 மற்றும் 2009.06.17 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை, 09/2009 (I) இன் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என இதனால் தெளிவுபடுத்துகிறேன்.

03. மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்குமாறு சகல நிறுவனத் தலைவர்களும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி இலக்கம் : 0112-699399

தொலைநகல் இலக்கம் : 0112-692158

மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk